
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2049 • செப்டம்பர் 29, 2018

Weekly E-paper • September 29, 2018



## உள்ளே...



**ரஃபேல் - ஊழல்**
மா.உதயகுமார்



**பெரியார் சிலை**
வெற்றிச்செல்வன்



**சந்திரகுப்தனும் சாணக்கியனும்**
எழில். இளங்கோவன்

# அது என்ன நல்ல காதலும், கள்ளக் காதலும்..?

- சுப.வீரபாண்டியன்




# கருஞ்சட்டைப் பதிப்பகம்

திராவிடத் தமிழர் அறக்கட்டளையின் சார்பில், மிக விரைவில், கருஞ்சட்டைப் பதிப்பகம் தொடக்க விழாவும், நூல்கள் வெளியீடும் நடைபெற உள்ளன. அப்பதிப்பகத்தின் மேலாண்மைக் குழுவினராகக் கீழ்க்காணும் தோழர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

ஒருங்கிணைப்பாளர்:
பேல் ராஜன்

உறுப்பினர்கள்:
இரா. உமா, கார்த்திக், கிருஷ்ணவேல், திருக்குறளார், செந்தில்குமரன்(சாண்டி), சரவணன், ஜெயசூர்



சுப. வீரபாண்டியன்
(மேலாண்மை அறங்காவலர்)
திராவிடத் தமிழர் அறக்கட்டளை

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2049 ●செப்டம்பர் 29, 2018

Weekly E-paper ●September 29, 2018

# அது என்ன நல்ல காதலும், கள்ளக் காதலும்..?



சுப. வீரபாண்டியன்

செப்டம்பரில், அதிரடியான மூன்று தீர்ப்புகளை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது. தன் பாலின உறவு குற்றமில்லை, திருமணம் கடந்த உறவு குற்றவியல் பிரிவில் வராது, சபரிமலைக் கோயிலுக்குள் பெண்களையும் அனுமதிக்க வேண்டும் ஆகியனவே அத்தீர்ப்புகள்!

மூன்றில் ஒரு தீர்ப்பு, மணவாழ்க்கை கடந்த உறவு பற்றியது. அது தொடர்பான 497 ஆம் சட்டப் பிரிவை உச்ச நீதிமன்றம் நீக்கியுள்ளது. எனினும் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். திருமணம் ஆன ஒரு ஆண், திருமணம் ஆன ஒரு பெண்ணுடன் உறவு வைத்துக் கொள்வது குற்றவியல் குற்றம் (criminal offence) என்று கருத வேண்டியதில்லை, அது ஒரு குடிமை வகைக் குற்றமே (Civil offence) என்றுதான் கூறியுள்ளது. அது குற்றமே இல்லை என்று நீதிமன்றம் சொல்லவில்லை. குடிமையியல் குற்ற அடிப்படையில், மணவிலக்கு கோரவும் உரிமை உண்டு.

அந்த சட்டப் பிரிவை நீக்கியதால், இனி நாட்டில் பாலியல் குற்றங்கள் பெருகிவிடும் என்றும், பண்பாடு சீரழிந்துவிடும் என்றும் வழக்கம்போல் குரல்கள் சில ஒலிக்கின்றன. அந்தச் சட்டப் பிரிவு எப்போதோ நீக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வளவு மோசமான உள்ளடக்கம் உடையது அது. இதோ அந்தப் பிரிவு அப்படியே கீழே தரப்படுகின்றது:

Adultery.—Whoever has sexual intercourse with a person who is and whom he knows or has reason to believe to be the wife of another man, without the consent or connivance of that man, such sexual intercourse not amounting to the offense of rape, is guilty of the offense of adultery, and shall be punished with imprisonment of either description for a term which may extend to five years, or with fine, or with both. In such case the wife shall not be punishable as an abettor. (Sec. 497 of IPC)

மேலே உள்ள சட்ட விதியை ஊன்றிப் படித்தால், அது எவ்வளவு தூரம் பெண்களையும், மனித உறவுகளையும் கொச்சைப்படுத்திடுகிறது என்பதை உணரலாம்.

திருமணம் ஆன ஒரு ஆண், திருமணம் ஆன இன்னொரு பெண்ணுடன், அந்தப் பெண்ணின் கணவருடைய அனுமதி இல்லாமல் உடல் உறவு கொள்ளக் கூடாது என்றும், அப்படிச் செய்தால் 5 ஆண்டுகள் சிறை என்றும் கூறுகிறது.

அடுத்தவன் அனுமதியுடன் அவன் மனைவியோடு உறவு கொள்வதுதான் ஆகச் சிறந்த பண்பாடா? அவள் அவனுடைய உடைமைப் பொருளா? அந்தப் பெண்ணின் உணர்வு, அனுமதியென எதுபற்றியும் பேசாமல், அவள் கணவனின் அனுமதி என்பது சமூக இழிவு இல்லையா? அந்தப் பிரிவை நீக்கியதன் மூலம் அந்த இழிவை உச்ச நீதிமன்றம் விலக்கியுள்ளது என்றே கூற வேண்டும்.

கணவனும், மனைவியும் ஒருவரை ஒருவர் காதலித்தே தீர வேண்டும் என்றோ, பிறர் மீது காதல் வரவே கூடாது என்றோ சட்டம் போட இயலுமா? ஓஷோ சொல்வது போல், காமம் என்பது காதல் வயப்பட்டதேயன்றி, சட்டத்திற்கு உட்பட்டதன்று.

சமூக ஒழுங்கிற்காகச் சில மரபுகளை நாம் வைத்துள்ளோம். ஆனால் அந்த மரபுகளும், கால ஓட்டத்தில் மாறக்கூடியனவே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

ஆணுக்குப் பெண் அடங்கி நடப்பதுதான் சிறந்த பண்பாடு என்னும் எண்ணம் உள்ளவர்கள் இந்தக் காலத்திலும் இருப்பது வியப்பே. அது ஒழிக்கப்பட வேண்டிய அடிமைப் பண்பாடு. பாலின சமத்துவம் என்பதே உயர்ந்த பண்பாடு. அதனை நோக்கியே இந்தத் தீர்ப்பு அமைந்திருப்பதால், உச்ச நீதிமன்றத்திற்கு நம்முடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்பில் மலர்வதே காதல். அந்தக் காதல் என்பது எப்போதும் ஒன்றுதான். அதில் நல்ல காதல், கள்ளக் காதல் என்றெல்லாம் எதுவும் கிடையாது.

# ரஃபேல் – ஊழலில் பறக்கும் (வி)மானம்!

மா.உதயகுமார்



கல்வி, சுகாதாரம் ஆகியனவற்றில் அதிக முதலீடு செய்யும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 158 ஆவது இடத்தில் இருக்கிறது. ஆனால் ஆயுத இறக்குமதியில் உலகளவில் மிகப் பெரிய நாடாக இந்தியா இருக்கிறது. இந்த ஆண்டு மட்டும் பாதுகாப்புத் துறைக்கு ரூ.2.95 இலட்சம் கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. பெரிய தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பெரிய அளவில் ஊழலும் நடைபெறுகிறது.

ஊழல் ஒழிப்பை முன்னிறுத்தி ஊராரை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த பா.ஜ.க, ஊரறியாமல் பல்வேறு பரிமாணங்களில் ஊழலில் ஈடுபட்டு வந்தது.(பண மதிப்பு நீக்கத்தை விடவும் பெரிய ஊழல் ஒன்று இருக்க முடியுமா?) இப்போது ஊரறிந்த ஊழல் ஒன்று உருவெடுத்திருக்கிறது. அதுதான் ரஃபேல் பேரம்.

7000 ஆண்டுகளுக்கு முன்னர் முதன்முதலாக பரத்வாஜ மகரிஷி என்பவர் விமானங்களைக் கண்டுபிடித்ததாகவும், நவீனத் தொழில்நுட்பங்கள் கூட அருகில் வரமுடியாதென்றும், இந்திய அறிவியல் மாநாட்டில் (Indian Science Congress) கேப்டன் ஆனந்த் போடாஸ் தெரிவித்தார்.

இப்பேற்பட்ட அறிவியல் தொழில்நுட்பம் கொண்ட நாடு, விமானப் படைக்குப் போர் விமானங்கள் வாங்க பிரான்ஸ் நாட்டை நாடியது.

இரகசிய பேரம் நடத்தியது.

ரூ.59,000 கோடி பெறுமானமுள்ள இந்த ஒப்பந்தம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தஸ்ஸோ நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டது. அதன் இந்தியத் தொழிற்கூட்டாளியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது அனில் அம்பானிக்குச்

> **மேக் இன் இந்தியா அல்ல மேக் இன் அம்பானி**

சொந்தமான நிறுவனம். பொதுத்துறை நிறுவனமான இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) பெற வேண்டிய ஒப்பந்தம் தான் மோடி நடத்திய பேரத்தில் ரிலையன்ஸ் நிறுவனத்திற்குச் சென்றது.

‘நவரத்னா’ அந்தஸ்த்து பெற்ற நிறுவனம் வேண்டாமாம். ஒப்பந்தம் செயவதற்குச் சில நாட்களுக்கு முன் தொடங்கப்பட்டு, நடைபழகும் நிறுவனம் (ரிலையன்ஸ் டிஃபன்ஸ் லிமிடெட்) தான் இந்தியப் பாதுகாப்புத் துறைக்கு வேண்டுமாம். ரிலையன்ஸ் குழும நிறுவனங்கள் 1 இலட்சம் கோடி ரூபாய் கடனில் தத்தளிக்கின்றன. அவர்களைக் காப்பாற்ற யார் இருக்கிறார்கள், மோடியைத் தவிர.

126 விமானங்கள் வாங்க வேண்டிய ஒப்பந்தம் 36 ஆகக் குறைக்கப்பட்டது. இது அரசின் உயர் அதிகாரிகளுக்கே தெரியாது. அதே போல் விமானங்களுக்கு அதீத விலை கொடுக்கப்படுகிறது. ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு ரூ.21,000 பெறுமான ஒப்பந்தம் கிடைக்கிறது. மேக் இன் இந்தியா (Make in India) அல்ல மேக் இன் அம்பானி (Make in Ambani).

இந்த ஒப்பந்தம் விமானப்படையில் விமானங்களைப் பெருக்குவதற்காகச் செய்யப்பட்டதா அல்லது அம்பானியின் வியாபாரத்தைப் பெருக்குவதற்காகச் செய்யப்பட்டதா என்பதுதான் அடிப்படையான கேள்வியாக இருக்கிறது.

இந்தப் பேரத்தைப் பற்றி, பா.ஜ.க வெளிப்படையாகப் பேச வேண்டும், நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றுதான் பா.ஜ.க விற்குக் கோரிக்கைகள் விடப்படுகின்றன. யாருடைய வங்கிக் கணக்கிலிருந்து யாருடைய வங்கிக் கணக்கிற்குப் பணப்பரிமாற்றம் நடைபெற்றது என்பதை ஆய்வது, தொடர்புடைய அமைச்சர்கள், அதிகாரிகளிடம் சிபிஐ சோதனை செய்வது, அவர்களைப் பொறுப்பேற்று பதவி விலகச் சொல்வது, அரசிற்கு பல இலட்சம் கோடி இழப்பு என்று தொடர்ந்து ஊடகங்களில் பரப்புரை செய்வது, குல்லா அணிந்து கொண்டு அண்ணா ஹசாரே உண்ணா விரதம் இருப்பது, இது போன்ற செயல்களெல்லாம் காவிகளுக்கு மட்டும் விதிவிலக்கு.

ஊழல் எதிர்ப்பில் கூட ஊழல் செய்யும் நாடு இந்தத் திருநாடு தான். ●

## வினாவும்? விடையும்!



**ஆரியத்தால் வீழ்ந்தோம், திராவிடத்தால் எழுந்தோம் என்று நாம் கூறி வருகிறோம். அதுதான் உண்மையான கூற்றும் கூட! ஆனால் இன்றோ, தமிழ்த் தேசியம் என்னும் வாயிலாகத் திராவிடத்தையும், அதன் சித்தாந்தங்களையும் அழிப்போம் என்று கூறுவதன் உள்நோக்கம் என்ன?**

– வினோத் விஜயகுமார், மதுரை.

**சுபவீ விடை:** தமிழ்த் தேசியம் பேசும் அனைவரும் அப்படிக் கூறுவதில்லை. மிகச் சிலரே, உண்மைக்கு மாறாக அப்படிப் பேசிவருகின்றனர். அவர்கள் கிளை மரத்தில் அமர்ந்துகொண்டு அடிமரத்தை வெட்டுகின்றனர். தமிழ் இன, மொழி உணர்வைத் தமிழ்நாட்டில் ஊட்டியதில் திராவிட இயக்கத்திற்குப் பெரும் பங்குண்டு. அவ்வியக்கத்திற்கு நன்றி கூறாமல், அதனைத் தாக்கிப் பேசி வருவோர் யாராக இருக்கக்கூடும்? திராவிட இயக்கத்தை, அதன் கொள்கைகளை, அதன் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை எதிர்ப்போர், மறைமுகமான பார்ப்பன ஆதரவாளர்களாகவே இருக்க முடியும்! கால ஓட்டத்தில் அவர்கள் கரைந்து போவார்கள்!

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
122/130 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

## கரூர் பள்ளப்பட்டி...



*23.09.2018 அன்று, கரூர் அருகில் உள்ள பள்ளப்பட்டியில் நடைபெற்ற தி.மு. கழகப் பொதுக்கூட்ட மேடையில் தோழர் சுபவீ மற்றும் திமுக முன்னோடிகள்.*

## மயிலாடுதுறை...



*26.09.2018 அன்று, மயிலாடுதுறையில், பெரியார் பிறந்த நாள் விழாக் கூட்டம் நடைபெற்றது. 'பெண்ணாய் நின்று பேசிய பெரியார்' என்னும் தலைப்பில் தோழர் சுபவீ உடன் , விழா ஏற்பாட்டாளர்கள்(வலமிருந்து) சிவகுமார், பவுல்ராஜ், ராஜா ஆகியோர்*

## சென்னை பெரியார் திடல்...



*27.09.2018 அன்று, சென்னை பெரியார் திடலில், கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி' தொடர் சொற்பொழிவில் முதல் பொழிவைச் சுபவீ நிகழ்த்தினார். மேடையில் மயிலை நா.கிருஷ்ணன், சத்ய நாராயணன் அமர்ந்துள்ளனர்.*

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## புனிதமாக்கும் தீர்ப்பு!

தனக்குத் தேவையான போது தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவும், தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் ஆன்மீகக்காரர்களால் உருவாக்கபட்ட சொற்கள் 'புனிதம் - தீட்டு'.

இவை இரண்டிற்கும் இவர்கள் என்ன அளவுகோல்கள் வைத்திருக்கிறார்கள்? இதுவரை எவரும் சொன்னதில்லை.

அய்யப்பன் புனிதமானவன், நமக்கு கவலை இல்லை. பெண்கள் தீட்டானவர்கள்! அது எப்படி?

பெண்களுக்கு மாதவிடாய் ஏற்படுவதால் அவர்கள் தீட்டானவர்கள், சொல்கிறார்கள். அதனால், அவர்கள் அய்யப்பன் கோயிலுக்குப் போகக்கூடாதாம்!

''மூளை எங்கும் மூடத்தனம்'' என்பார் தோழர் உதயகுமார். இது இவர்களுக்குப் பொருந்தும்.

மாதவிடாய் என்றால் என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு பெண்ணின் உடல் இயற்கையாகவே தூய்மைப் படுத்தப் படுவது மாதவிடாய். தூய்மையற்றவை வெளியேறுகிறது குருதியாக. அவ்வளவுதான்.

இதில் எங்கே இருக்கிறது தீட்டு? இதைத் தீட்டு என்று சொன்னால், வயிற்றில் மலத்தையும், சிறுநீரையும் சுமந்து கொண்டு திரியும் அனைவரும் தீட்டானவர்கள் இல்லையா?

பெண்ணின் மாதவிடாய் ஒரு உயிரைக் கருவாக உருவாக்குகிறது. எந்த ஒரு ஆணுக்கும் இத்தகைய சக்தி இருக்கிறதா?

அப்படியானால் பெண் எப்படித் தீட்டாவாள்!

இரண்டு ஆண்களுக்குப் பிறந்தவன் அய்யப்பன் என்கிறது ஒரு கதை.

தன் தாய் உடல் நிலை சரியில்லாத போது புலிப்பால் வேண்டி அய்யப்பன் காடு சென்றதாக இன்னொரு கதை சொல்கிறது.

இரண்டாம் கதையில் வரும் தாய் ஒருவேளை வளர்ப்புத்தாயாக இருந்தாலும் கூட அவளும் ஒரு பெண்தான் என்பதை மறுக்க முடியாது.

அந்தத் தாயும் மாதவிடாய்க்கு விதிவிலக்கு இல்லை.

கதையாக இருந்தாலும் கூடப் பெண் பழிக்கப்படக்கூடாது.

இவைகளையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் பெண்களைத் தீட்டு என்பது மனுவாதம்.

சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குள் பெண்கள் வருவது குற்றமில்லை. ஆண்களும் பெண்களும் சமமானவர்கள்தான் என்ற உச்சநீதி மன்றத் தீர்ப்பு உண்மையில் வரலாற்றுச் சிறப்பு மிக்கது, வரவேற்கத் தக்கது.

இது நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

அப்போது சபரிமலை 'புனிதமாகும்' - பெண்களால்.

## நூல் வெளியீடு...




*பேரவை உறுப்பினரும், எழுத்தாளருமான கிருஷ்ணவேலின், 'உ.வே.சா. தமிழ்த்தாத்தாவா' என்னும் நூல் வெளியீட்டு விழா 28.09.2018 அன்று, சென்னை ஜாபர்கான் பேட்டையில் நடைபெற்றது. தோழர் சுபவீ, மருத்துவர் ஷாலினி ஆகியோர் உரையாற்றினர்.*

# எதிர்வினை



ஜேசுதாஸ் பாடிய அரிவராசனம் பாடலினைக் கேட்கும்போது, கோல்வால்கரின் கோகுலக் கண்ணன்கள் காதினை மூடிக்கொள்வார்களா? சங்கீதக் கலையில் பார்ப்பனர்களின் ஆதிக்கம் இருந்த போதிலும் , இப்படியொரு எதிர்ப்பை எந்தச் சங்கீதவாதிகளும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். கலையிலும் கொலைகள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று.

***து. செல்வக்குமார், சென்னை.***

தோழர் உமாவின் கட்டுரை தமிழக மக்கள் ஒவ்வொருவரின் உணர்வினை அப்படியே பிரதிபலித்திருந்தது என்பதற்கு எனது சொந்த அனுபவமே எடுத்துக்காட்டாக இருப்பதை உணர்ந்தேன். வாழ்த்துகள் தோழர் உமா.

***சி.முருகேசன், திருச்சி.***



# அட்மின்களும் அடிமை அரசும்!

**வெற்றிச்செல்வன்**

*“குளம் வற்றினால் குத்துக் கல்லுக்கு என்ன வாட்டம்?” என்று கிராமங்களில் ஒரு பழமொழி உண்டு. குளத்தில் தண்ணீர் இருந்தாலும் இல்லாவிட்டாலும், குளத்தின் நடுவே இருக்கும் கல்லுக்குக் கவலை கிடையாது. அதுபோலத்தான் உள்ளது இன்றைய தமிழக அரசின் செயல்பாடு (?).*

*எப்படியாவது கலவரத்தை அரங்கேற்றி அதன்மூலம் அரசியல் செய்திட முயலும் பா.ஜ.க ஒருபக்கம். கூழைக் கும்பிடு போட்டே ஆட்சியைப் பிடித்து, இன்று தில்லி எசமானுக்கு விசுவாசமாய் அடிமைச் சேவகம் செய்கிற அதிமுக அரசு மற்றொரு பக்கம். நாட்டில் என்ன நடந்தாலும் சரி, அதைக் கண்டுகொள்ளாமல் வீட்டிற்குக் கொண்டுபோக எவ்வளவு சுருட்டலாம் என்பதே அரசை நடத்துபவர்களின் அன்றாடத் திட்டம்.*

*திருப்பத்தூர், சென்னை, தாராபுரம், சோமரசன்பேட்டை, காவராப்பட்டு என, தொடர்ந்து தந்தை பெரியாரின் சிலை அவமதிப்புக்கு உள்ளாகி வருகிறது. இந்த நிகழ்வுகளுக்கெல்லாம் விஷ விதை ஊன்றப்பட்டது இந்த ஆண்டு மார்ச் மாதத்தில்தான். ஆம்! பா.ஜ.க. வைச் சேர்ந்த ஹெச். ராஜாவின் ட்விட்டர் பதிவுதான் அது.*

*வரலாறு நெடுகிலும் சிலை குறித்த நிகழ்வுகளுக்குப் பஞ்சமில்லை. பாமியானில் புத்தர் சிலை தாலிபான்களின் மதவெறி காரணமாக உடைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் கண்ணகி சிலை ஆணவப் போக்கினால் அகற்றப்பட்டது. சமூக விடுதலைக்குப் பாடுபட்ட அண்ணல் அம்பேத்கரின் சிலை இன்றும் சிறையிலிருந்து மீள முடியவில்லை.*

*ஒரு செயலைச் செய்துவிட்டு, பின்னர் அதன் விளைவுகளைக் கண்டு அஞ்சி நடுங்கி அச்செயலை நான் செய்யவில்லை என்று பின்வாங்குவது எவ்வளவு வெட்கக்கேடானது? ஒரு தொலைக்காட்சி விவாதத்தில், சில நிமிடங்களுக்கு முன்னர் தான் பேசியதை இல்லவே இல்லை என்று ஹெச்.ராஜா சாதித்தபோது நாடே அதைக் கண்டு சிரித்தது. ட்விட்டர் பதிவு விஷயத்திலும், தற்போது திருமயத்தில் நீதிமன்றத்தை அவதூறாகப் பேசியதிலும் அதுவே நடந்துள்ளது. “பேச நா இரண்டுடையோய் போற்றி” என்று ஆரிய மாயையில் அண்ணா குறிப்பிடுவது எவ்வளவு பொருத்தமானது.*


*பிள்ளையார் சிலையை உடைத்த பெரியார் துணிச்சலோடு நீதிமன்றத்தை எதிர்கொண்டார்.*

*இங்கோ, சிலையுடைப்பைத் தூண்டிய சிறுநரிகள் தொடை நடுங்கிப் போகின்றன.*

*கார்ட்டூன் போட்டதற்கே காலரைப் பிடித்திழுத்துப் போகும் காவலர்களோ சேவகர்களாய்க் கைகட்டி நிற்கின்றனர்.*

*மனுநீதி ஆள்கிறது. மனித நீதி அவர்கள்முன் மண்டியிடுகிறது.*

*இவர்களால் சிலைகளைத்தான் சிதைக்க முடியும், சித்தாந்தங்களை அன்று.*






SubaVeerapandian
@Suba_Vee

#கருணாஸ் கைது செய்யப்பட்டது சரிதான். #ஹெச்ராஜா, #எஸ்விசேகர் களுக்கு மட்டுமே உள்ள தனிச் சட்டத்தை அவர் எப்படிப் பயன்படுத்தலாம்? "நூலிழையில் " இங்கு ஆயிரம் வேறுபாடுகள் உள்ளன என்பதை அவர் உணர வேண்டாமா? #HRaja

7:30 AM · 23 Sep 18




# சந்திரகுப்தனும் சாணக்கியனும்

**எழில்.இளங்கோவன்**

நந்தவம்சப் பேரரசின் வீழ்ச்சியில் இருந்து மவுரியப் பேரரசு எழுச்சி பெற்றது என்பது வரலாறு.

நந்தமன்னன் தன்னை அவமானப்படுத்தி விட்டான் என்பதனால், அந்த வம்சத்தின் ஆட்சியைப் பூண்டோடு அழித்து விட்டான் சாணக்கியன் என்பது வரலாறன்று. ஒருகதை.

நந்தர்களை ஒழித்துக் கட்டுவதில் முனைப்புக் காட்டியவன் சாணக்கியன் என்பதை எப்படி மறுக்க முடியாதோ, அப்படியே அவனை இயக்கியது பார்ப்பனியம் என்பதையும் மறுக்கக்கூடாது.



யார் அந்த நந்தர்கள்? ஒரு நாவிதருக்கும், ஒரு கணிகைப் பெண்ணுக்கும் பிறந்தவன் மகாபத்மநந்தன் என்கிறது சமண நூலாகிய பரிஸ்தவபர்வ. இவனே நந்தப் பேரரசை நிறுவியவன்.

நாவிதன் மகாநந்திக்கும், ஒரு சூத்திரப் பெண்ணுக்கும் பிறந்தவனே நந்தவம்சத்தை நிறுவிய மகாபத்மநந்தன் என்று புராணங்கள் சொல்கின்றன.

மகாபத்மநந்தன் “நாவீததாசன்” என்கிறது அவாங்யக சூத்ரம்.

மகாவம்சம் உள்ளிட்ட பவுத்த நூல்கள் நந்தர்களை “அனாதகுலத்தவா” என்று கூறுகின்றன.

நந்தர்களின் ஆட்சியை நிறுவியவர்; ஒரு தாழ்ந்த குலத்தவர்; என்கிறார் கர்டியஸ் என்ற கிரேக்க அறிஞர்.

மொத்தத்தில் நாவிதருக்கும், கணிகைக்கும் பிறந்தவர் மூலம் அரசும், நந்தவம்சமும் அமைவதனால் நந்தர்கள் தாழ்ந்த குலத்தவர்கள் என்ற செய்தியை வரலாறு நமக்குத் தருகிறது.

இங்கு கவனிக்க வேண்டிய செய்தி நந்தர்கள் தாழ்ந்தவர்கள், நான்காம் வருணத்தவர் – சூத்திரர்.

வட இந்தியாவில் முதல் முதலாக நிறுவப்பட்ட நந்தர்களின் பேரரசு ஒரு சூத்திர அரசு என்பதால், அதைப் பார்ப்பனர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அதை ஒழித்துக் கட்ட சாணக்கியனை முன்னிறுத்தியது பார்ப்பனியம்.

சாணக்கியன் சந்திர குப்த மவுரியனைத் தன் கைப்பாவையாக்கினான்.

இப்பொழுது அடுத்த கேள்வி! சந்திரகுப்த மவுரியன் யார்?

சாக்கிய இனக்குழுவின் ஒரு பிரிவு மவுரியர். இந்த மவுரிய இனக்குழுவின் அடையாளம் மயில். இனக்குழுவின் அழிவில் இருந்து அரசுகள் தோற்றம் பெற்ற பின்னர், மவுரியர் என்பது இனமாக அடையாளம் பெற்றது. மவுரிய இனத்தில் வைசியர்கள் என்ற மூன்றாம் வருணம் “குப்த” என்ற பெயரால் வட இந்தியாவில் அழைக்கப்பட்டது.

சந்திரகுப்த மவுரியன் வருணாசிரம அமைப்பில் மூன்றாம் படிநிலையில் வைசியனாவான்.

சரியாகச் சொன்னால் வருண அமைப்பில் மூன்றாம் இடத்தில் உள்ள வைசிய சந்திர குப்தனை வைத்து, நான்காம் இடத்தின் சூத்திர நந்தப் பேரரசை வீழ்த்துகிறது பார்ப்பனியம், சாணக்கியன் மூலம்!

இங்கே பார்ப்பனியத்தின் இன்னொரு சதிச் செயலையும் கவனிக்க வேண்டி இருக்கிறது.

நந்தப் பேரரசின் இறுதி மன்னன் தனநந்தன். இவனின் ஆட்சிக்காலம் கி.மு. 329 முதல் 321 வரை எட்டுஆண்டுகள். இவனின் மூன்றாம் ஆட்சியாண்டில், அதாவது கி.மு. 326இல் கிரேக்கப் பேரரசன் அலெக்சாண்டர் இந்தியாவிற்குள் நுழைந்து பியாஸ் நதிக்கரையில் முகாமிட்டு இருந்தான்.

இப்பொழுது கிரேக்க ஆசிரியர் புளூட்டார்க் சொல்வதைக் கேட்போம்:

“நந்த அரசன் மக்களின் ஆதரவை இழந்துவிட்டான். அவனுக்கு எதிராக மக்கள் எழுச்சி ஏற்படுகிறது. அதனால் பியாஸ் நதியைக் கடந்து நந்த அரசைத் தாக்க வேண்டும்” என்று அலெக்சாண்டரிடம் சந்திரகுப்தன் அழைப்பு விடுத்தான்'' என்ற இந்த கிரேக்க ஆசிரியரின் எழுத்தைத் தந்தவர் ஏ.எல்.பாஷ்யம்.

அதாவது கீழ்ச்சாதியான சூத்திர நந்தர்களை ஒழிக்க அந்நியரான கிரேக்க மன்னனிடம் பணிந்து அழைப்பு விடுக்கக்கூட தயங்கவில்லை சந்திரகுப்தனும், சாணக்கியனும். இதுதான் வரலாற்றில் பார்ப்பனிய வருணாசிரமம்.

மூன்றாவதும் ஒருசெய்தி இருக்கிறது.

சந்திரகுப்தன் ஆட்சிக்காலத்தில், அலெக்சாண்டரின் ஆளுநர் செல்யுகஸ் நிகேட்டர் மீது படையெடுத்து, அவனை வென்று ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டான் சந்திரகுப்தன். இவனை இயக்கியவன் சாணக்கியன் என்கிறது இன்னொரு வரலாறு! இது முற்றிலும் தவறான செய்தி.

அலெக்சாண்டர் கி.மு. 323 ஆம் ஆண்டு பாபிலோனில் நெடிகண்ட் மாளிகையில் மரணம் அடைகிறான்.

இதை ஒற்றர்கள் மூலம் கேள்விப்பட்ட செல்யுகஸ் நிகேட்டர் உடனடியாக மெசபடோமியா (இன்றைய ஈராக்) மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டின் மன்னனாக முடிசூடினான். அனடோலியா, சிரியா, கார்த்திரியா போன்ற பகுதிகளையும் பிடித்துத் தென்கிழக்குக் கிரேக்கத்தின் பேரரசராகத் தன் 82 வயது வரை வாழ்ந்து மறைந்தான் கிரேக்கத்தில்.

இப்படி நாட்டில் இல்லாத ஒரு மாவீரனை வென்றதாகவும்,ஒப்பந்தம் போட்டதாகவும் சொல்வது வரலாற்று மோசடி.

ஒரு சூத்திர நந்த அரசை, ஒரு வைசிய சந்திரகுப்தனைக் கொண்டு வீழ்த்தியதில் பார்ப்பனிய வர்ணாசிரமம் இருக்கிறது.

அலெக்சாண்டரைப் பணிந்து நந்தர்களை வீழ்த்த அவர்களை அழைத்ததால் அங்கே பார்ப்பனியச் சதி இருக்கிறது.

செல்யூகஸ் நிகேட்டரை வென்றதாகச் சொன்னதில் பார்ப்பனியப் புரட்டு இருக்கிறது.

சந்திரகுப்தனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஒன்பது மவுரிய மன்னர்களும் பவுத்த நெறியில் அரசை நிறுவி ஆட்சி செய்தார்கள்.

பார்ப்பனியம் பதுங்கியது அங்கே!

அதைப் பார்ப்பதற்குச் சாணக்கியன் இல்லை அன்று!

சந்திரகுப்தனும் கூட பார்ப்பன விரக்தியில் சமண தழுவி கார்நாடக சரவணபெலகொட என்ற இடத்தில் மரணம் அடைந்தான்.

இன்று அந்த இடம் “சந்திரகிரி”.

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.